மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி.

"தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப் பெறுதல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 32/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2-முதல் 21-வரையில் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப் பெறுதல் மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 32/70) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

9. அரசினர் தீர்மானங்கள்.

(அ) உறுப்பினர்கள் சொத்துவிவரம் தெரிவிக்கும் படிவத்தில் திருத்தம்.

மாலை 5-30 மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்ற உறுப்பினர்களின் சொத்து பற்றிய விவரங்களைத் தெரிவிப்பது குறித்து அரசுத் தீர்மானத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் 'விவரக் கணக்குகள் கொடுப்பதற்கான நடைமுறை' என்ற தலைப்பின்கீழ் (2) பத்தியில்,

'ஏப்ரல் 30-ம் நாள்' என்ற சொல்லுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, 'செப்டம்பர் 30-ம் நாள்' என்ற சொல்லையும், இலக்கங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு 1950-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்து விதிகளில் திருத்தம்.

THE HON. DR. (THIRUMATHI) SATHIAVANIMUTHU: Sir, I move—

"That the following draft rule to be issued by the State Government under section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923) substituting the existing rule 7 of the Tamil Nadu Cotton Transport Rules, 1950 be approved as required by section 8 of the said Act".

DRAFT NOTIFICATION.

In exercise of the powers conferred by section 7 of the Cotton Transport Act, 1923 (Central Act III of 1923), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Tamil